2019 ஜூலை 18]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல கருத்து. Multipurpose Hospital Workers, அவர்கள் சொன்னபடி 2 ஆண்டுகளிலே காலமுறை ஊதியத்திற்காகத்தான் through employment and paper advertisement மூலமாக அவர்களுக்கு interview வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் Deputy Director தலைமையில் குழு இருக்கிறது. அவர்களைத் தேர்வுசெய்து அந்தப் பணி நியமன ஆணையைக் கொடுக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் அதை நாம் புதுப்பிக்கிறோம். தொடர்ந்து 5 ஆண்டுகள் புதுப்பிக்கிறோம். 5 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தப் பணி நிறைவின்படி அவர்களுக்குக் காலமுறை ஊதியம் நிர்ணயிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதில் எந்தவிதமான தடையும் இல்லை. தாமதமும் இல்லை. 2 வருடம் என்று உறுப்பினர் சொன்னீர்கள். ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்து 5–வது ஆண்டில் regularisation செய்துவிடுகிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) As per G.O., இரண்டு ஆண்டுகளில் பணி நிரந்தரம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

வினா வரிசை எண் 138, மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

138—

விட்டுமனைப் பட்டா

***5714—திரு. விருகை V.N. ரவி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2019 ஜூலை 18

(அ) விருகம்பாக்கம் தொகுதி, பச்சையம்மன் கோயில் பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சென்னை மாவட்டம், மாம்பலம் வட்டம், விருகம்பாக்கம் கிராமத்திற்குட்பட்ட பச்சையம்மன் கோயில் தெரு, பகுதி எண் 2, நகரபுல எண் 27–ல் உள்ள நிலமானது ஆக்கிரமிப்புப் பகுதியாகவும், பகுதி எண் 3, நகரபுல எண் 13–ல் உள்ள அரசு புறம்போக்கு நிலமானது 'மயானம்' என்றும், பகுதி எண் 5, நகரபுல எண் 2–ல் உள்ள நிலம் 'தரிசு' சுடுகாடு என்றும், பகுதி எண் 5, நகரபுல எண் 23–ல் உள்ள நிலம் 'தரிசு' என்றும், பகுதி எண் 5, நகரபுல எண் 45–ல் உள்ள நிலம் 'தரிசு' சுடுகாடு என்றும் வகைப்பாடு கொண்ட அரசு புறம்போக்கு நிலங்கள் ஆகும்.

மேற்கண்ட புலங்கள் மயானம், சுடுகாடு மற்றும் தரிசு என்ற வகைப்பாடு கொண்ட அரசு நிலங்களாக உள்ளன. மேலும், சென்னை மாநகரத்தில் அரசாணை எண் 1135, வருவாய்த் துறை, நாள் 16–3–1962–ன்படி அரசு புறம்போக்கு நிலங்களில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்கத் தடையாணை உள்ளது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

இந்தத் தடையாணையை விலக்கி, மக்கள் நலன் சார்ந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிற கோரிக்கையை நிறைவேற்றுகிற வகையில், இரண்டு அரசாணைகளை மிக விரைவில் இந்த மாமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கவிருக்கிறார்கள் என்பதையும், அது கிடைத்ததற்குப் பின்பு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை பரிசீலனைக்கு எடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதையும் மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 ஜூலை 18]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்கள்.*

திரு. விருகை V.N. ரவி: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'அம்மா' நீங்கள் விண்ணுக்கு சென்றதுகூட வெளிச்சம் கொண்டு வந்திடவா! மண்ணுக்குள் சென்றாலும் மனதை விட்டு அகற்றுவது இயலுமா உங்களை! கடற்கரை நிழலில் காவேரித் தாய் உறங்கிக் கொண்டிருக்கிறார்! இனி சுனாமி வருவதற்கும் தயங்கும்! தமிழகத்தின் கவசமான எங்கள் தலைத் தாயைத் தாண்டி தாயே! நீங்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன்.*

அம்மாவின் கனவுகளை நனவாக்க அயராது உழைத்துக் கொண்டிருக்கும் அன்பான எங்கள் அண்ணனே! மக்களின் மன்னனே! நாட்களை எண்ணச் சொன்னவர்களின் நாவினை அடக்கிவிட்டு, நாளெல்லாம் மக்களின் முன்னேற்றம் ஒன்றே பெரிதென எண்ணி வெற்றிநடை போட்டுக்கொண்டிருக்கும் வீரத் திருமகனே! சேலத்துச் சிங்கமே! தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரமே! மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

பண்பின் சிகரம், பணிவின் உறைவிடம், ஆட்சிக்கும் கட்சிக்கும் அரணாக விளங்கி வரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வடபழனியிலிருந்து போரூர் வரை மேம்பாலம் அமைத்துத் தர அறிவிப்பினை அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விருகம்பாக்கம் தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விருகம்பாக்கம் தொகுதிக்குட்பட்ட 128—வது வட்டத்தில் பச்சையம்மன் கோயில் தெருவில் சுமார் 200 குடும்பங்கள் 50 ஆண்டு காலமாக வசித்து வருகின்றன. அவர்கள் ஏழையெளிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள். அவர்களுக்கு பட்டா வழங்கினால், சென்னை மாநகராட்சிமூலம் அனுமதி பெற்று வீடு கட்டிக்கொள்வதற்கும், வங்கிக் கடன் பெற்று வீடு கட்டுவதற்கும், குடும்பத்தில் 2, 3 பிள்ளைகள் இருப்பதன் காரணத்தினால் அதை பாகப்பிரிவினை செய்துகொள்வதற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டவிதிகளைத் தளர்த்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதனை எடுத்துச் சென்று, அங்கே வசிப்பவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு மிகப் பணிவன்புடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதில், அரசு புறம்போக்கு நிலங்களில் நீண்ட காலமாகக் குடியிருப்புகளாக உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி பட்டா வழங்குவதற்காக சிறப்பு அரசாணை (நிலை) எண் 496, மிக விரைவிலே காலநீட்டிப்போடு இந்த மாமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கவிருக்கின்றார்கள். ஆகவே, அரசாணை (நிலை) எண் 496 கிடைத்ததற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்து, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்கள்.*

முற்பகல் 11—05

திரு. விருகை V.N. ரவி: *அரசாணை கிடைக்கப்பெற்ற பிறகு பட்டா வழங்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது விருகம்பாக்கம் தொகுதிக்குட்பட்ட 137—வது வட்டத்தில் (குறுக்கீடு) உள்ள புல எண் 374, சுமார் 36 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம். மூவாயிரத்திற்கும் மேற்பட்ட ஏழையெளியவர்கள் அங்கு வசித்து வருகின்றனர். மாண்புமிகு அம்மாவின் அரசு அவர்களுக்கு சாலை, தெரு விளக்கு, குடிநீர், பாதாள சாக்கடை, மழைநீர்க் கால்வாய் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது. கடந்த 2016 ஆம் ஆண்டு தேர்தலின்போது நான் அங்கு வாக்கு சேகரிக்கச் சென்றபோது அவர்கள் வைத்த கோரிக்கை, 'நாங்கள் நீண்ட காலமாக இங்கே வாழ்ந்துவருகிறோம். எங்களுக்குப் பட்டா வழங்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்கள். நான் அந்த இடத்தில் 6 மாத காலத்தில் பட்டா பெற்றுத் தருவதாக உத்தரவாதம் கொடுத்தேன்.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

2019 ஜூலை 18]

அந்த நகருக்கு எம்.ஜி.ஆர். நகர் என்று பொன்மனச் செம்மல் பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது பெயரிடப்பட்டுள்ளது. அங்கே தமிழகத்திலுள்ள அத்தனை தலைவர்கள் பெயர்களிலும், தேசியத் தலைவர்கள் பெயர்களிலும், கடவுள்கள் பெயர்களிலும் தெருக்களின் பெயர்கள் அமைந்துள்ளன. ஆகவே, கருணை உள்ளம் கொண்டு அங்கே வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்கள் மக்கள் செல்வாக்குள்ள சட்டமன்ற உறுப்பினர். மக்களுடைய கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றுவதில் மிகுந்த கவனம் செலுத்திவருகிறார். ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்துவதிலே சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு அனைத்து முயற்சிகளையும் மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்துவருகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்கள் மக்களுக்கு கொடுத்திருக்கின்ற வாக்குறுதிகளை நிறைவேற்றுகிற வகையில், அரசாணை எண் 496 அவருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.*

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி தொகுதியிலே, அடையாறு, திருவான்மியூர் பகுதிகளில் கோவிந்தராஜாபுரம், மல்லிகைப்பூ நகர், திடீர் நகர், ஓடைமாநகர், தாமோதரபுரம், முன்னாள் இராணுவத்தினர் குடியிருப்பு; வேளச்சேரி பகுதியிலே ஆதம்பாக்கம், அம்பேத்கர் நகர், சாஸ்திரி நகர், தரமணியில் பாரதி நகர், கானகம் பகுதிகளில் 30 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் வசித்து வருகிறார்கள். வீட்டு வரி, குடிநீர்க் கட்டணம், மின் கட்டணம் யாவும் செலுத்தி வருகிறார்கள். இங்கெல்லாம் பட்டா வழங்கப்படாமலிருக்கிறது.

சில இடங்களில் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, அனைவருக்கும் பட்டா வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு, வழங்கப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே அந்தப் பகுதி மக்கள் 30 ஆண்டுகளுக்கு மேலாக அங்கே குடியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு அரசின் அனைத்து வசதிகளும் கிடைத்துக்கொண்டிருக்கின்றன என்ற விவரத்தையும் சொல்லியிருக்கிறார்கள். அரசு நிலங்களிலே குடியிருப்பு மூலமாக ஆக்கிரமணங்கள் செய்து, 5 ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் அங்கே குடியிருந்தாலே வரன்முறை செய்து பட்டா வழங்குவதற்கு வழிவகை இருக்கிறது. அந்த நிலத்தின் வகைப்பாட்டைப் பொறுத்து, பரிசீலனை செய்து, அரசு பட்டா வழங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த நிலத்தின் வகைப்பாட்டைப் பார்த்து அரசாணை எண் 496—க்கு உட்பட்டு வருமேயானால், நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

139—

தொழிற்பேட்டை

***47438—திரு. எஸ். ஈஸ்வரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, பவானிசாகரில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?